**செ. கு. எண்:145** **நாள்:14.06.2013**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 14.6.2013

சேலம் மாவட்டம், வீராணம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.ஜெயபால் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 26.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாவட்டம், அவனியாபுரம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C.வரதராஜன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 28.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், ஆம்பூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.சேகர் அவர்கள் ஆம்பூர் - வேலூர் தேசிய நெடுஞ்சாலையில் 30.5.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. K.பாலசுப்பிரமணியன்

அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 31.5.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், திருப்பூர் இருப்புப்பாதை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.சத்தியதாஸ் அவர்கள் உடல்நலக் குறைவால் 1.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், ஆத்தூர் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. P.வெயிலுகந்த பெருமாள் அவர்கள் உடல்நலக் குறைவால் 3.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும்;

வேலூர் மாவட்டம், கே.வி.குப்பம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. அர்ஜுனன் அவர்கள் உடல்நலக் குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 3.6.2013 அன்று காலமானார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் வரதராஜன், சத்தியதாஸ், வெயிலுகந்த பெருமாள், அர்ஜுனன்; தலைமைக் காவலர்கள் ஜெயபால், பாலசுப்பிரமணியன் மற்றும் காவலர் சேகர் ஆகியோரின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

உடல்நலக் குறைவால் காலமான சிறப்பு உதவி ஆய்வாளர்கள் வரதராஜன், சத்தியதாஸ், வெயிலுகந்த பெருமாள், அர்ஜுனன், தலைமைக் காவலர்கள் ஜெயபால் மற்றும் பாலசுப்பிரமணியன்; சாலை விபத்தில் உயிரிழந்த காவலர் சேகர் ஆகியோரின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

ஜெ ஜெயலலிதா
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**